**ஒப்படைப்பு**

**வகுப்பு** :12 பாடம் : **பொதுத்தமிழ்**

# இயல் - 2 (பெய்யெனப் பெய்யும் மழை)

**பகுதி – அ**

**I.ஒரு மதிப்பெண் வினா**

1. பொருத்துக

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன

ஆ) விலங்குகள் – 2 ) மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் – 3) குளிரால் நடுங்கின

ஈ) பசுக்கள் – 4 ) மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 2, 1, 3, 4

2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. **பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தன – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம்

5. தமிழில் திணைப்பாகுபாடு ------ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது

அ) பொருட்பெயர் ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

6. “உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே – இந்நுற்பா இடம்பெற்ற இலக்கண நூல் -----

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

7. யார்? எது? ஆகிய வினைச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே -

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

8. 'பிறகொரு நாள் கோடை' என்னும் இக்கவிதை எந்தத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

அ) இன்று ஆ) நீர்வெளி

இ) அய்யப்ப மாதவன் கவிதைகள் ஈ) மழைக்குப் பிறகும் மழை

9. உலக சுற்றுச்சூழல் நாளாக கொண்டாடப்படும் தினம் எது?

அ) ஜூன் 2 ஆ) ஜூன் 5

இ) ஜூன் 6 ஈ) ஜூன் 8

10. 'முதல் கல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ) பூமணி ஆ) உத்தமசோழன்

இ) ஜெயமோகன் ஈ) சுஜாதா

## பகுதி – ஆ

### II குறுவினா

1. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
2. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாக சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.
3. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக?
4. . இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக?
5. வாகைத்திணை என்றால் என்ன?

## பகுதி – இ

### III. சிறுவினா

6. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
7. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
8. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
9. '**வையகம் பனிப்ப**' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை எழுதுக?
10. கூதிர்ப்பாசறை துறையைச் சான்று தந்து விளக்குக.

## பகுதி – ஈ

### IV நெடுவினா

11. 'நெகிழி தவழ்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
12. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

# இயல் - 3 (பண்பாடு – சுற்றத்தார் கண்ணே உள)

## பகுதி – அ

### I.ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. 'குடும்பம்' என்ற சொல் முதன்முதலில் பயின்று வந்த நூல் ------

அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள் இ) நன்னூல் ஈ) புறநானூறு

2. தற்காலிகத் தங்குமிடத்தை ------- என்று புறநானூறு குறிப்பிடுகின்றது

அ) தம்மனை ஆ) தாய்மனை இ) புக்கில் ஈ) நும்மனை

3. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக் கூறும் நூல்

அ) பதிற்றுப்பத்து ஆ) கலித்தொகை இ) நற்றிணை ஈ) புறநானூறு

4. ----- முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன

அ) தந்தை வழி ஆ) தனிக்குடும்பம்

இ) விரிந்த குடும்பம் ஈ) தாய்வழி

5. 'கம்பராமாயணம்' எத்தனைக் காண்டங்களை உள்ளடக்கியது?

அ) மூன்று ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

6. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ------ ------

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

7. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீக கவிஞர்

ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்பமுறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

8. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

9. "உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்

இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

10. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே" – எனும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

## பகுதி – ஆ

### IIகுறுவினா

11. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக
12. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
13. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன்ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
14. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

    அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும்          ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
15. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

## பகுதி – இ

### III. சிறுவினா

16. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம்- விளக்கம் எழுதுக.
17. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
18. "வருபவர் எவராயினும்

    நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக
19. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
20. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக

## பகுதி – ஈ

### IV. நெடுவினா

21. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்றும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

22 பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.